**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனி - 2023**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்தவில்லை. இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்தை வழங்குவதற்கு அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மறுக்கப்பட்ட அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன். நிதி நிலைமைக் கூற்று, அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று உட்பட முக்கியமான விடயங்கள் மாற்று முறைகள் மூலம் உறுதிப்படுத்துவதற்கு மற்றும் சான்றுறுதி செய்வதற்கு எனக்கு முடியாமல் உள்ளது. இதன் காரணமாக, நிதி நிலைமைக் கூற்று, அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்ட பெறுமதி அல்லது விடயங்களின் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஏதேனும் சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு தேவைப்படுகின்றதென எனக்கு தீர்மானிக்க முடியாமல் உள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கம்பனி தொடர்ந்தியங்கும் தன்மையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக காணப்படுவதுடன், முகாமைத்துவம் கம்பனியை ஒழிப்பதற்கு விரும்பின் அல்லது மாற்று வழி காணப்படாத போது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ச்சியாக இயங்கும் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் கம்பனியின் தொடர்ந்து இயங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செய்முறை தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளும் பொறுப்பு தொடர்புடைய தரப்பினரினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகவுள்ள பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்த நிதிக்கூற்று தொடர்பாக எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 32 இற்கு இணங்க கணக்கீட்டு நியமமொன்றின் அங்கீகாரம் அல்லது தேவைப்பாட்டின் மீது அன்றி நிறுவனம் ஒன்றின் வருமானம் மற்றும் செலவுகள் எதிரீடு செய்யக்கூடாது எனினும், மீளாய்வாண்டிற்கான பெல்வத்த பிரிவின் ரூபா 3,406,051,222 இற்கான வருமானம் செலவுகளுடன் எதிரீடு செய்து நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கடன் அடிப்படையில் வழங்கப்படும் பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக செலவுக் கணக்கில் செலவு வைக்காமல் வருமானம் என காட்டப்பட்டு விவசாய கடன் கணக்குகளுக்கு வரவு வைத்த காரணத்தினால் பரீட்சை மீதியில் அந்த மீதி அடங்குகின்றது என. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வருமானங்கள் செலவுகளுக்கு எதிரீடு செய்யாமல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 117 இற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்படும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், செவனகல பிரிவு தொடர்பாக 2014 ஆண்டு முதல் இரண்டு நிறுவனங்களில் இருந்து மற்றும் ஒரு செயற்திட்டத்திலிருந்து அறிவிடப்பட வேண்டிய ரூபா 20,141,781 தொகை ஐயக் கடன் என ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஒதுக்கங்களுக்கான காரணம் மற்றும் உரிய கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | அடுத்த ஆண்டு சரி செய்வதற்கு இணங்குகின்றேன் என. | ஐயக் கடன் ஒதுக்கும் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பந்தி 51 இற்கு இணங்க நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி செயற்பட்டிருக்காமையால் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் செவனகல பிரிவின் ரூபா 386,601,213 கிரயத்திற்கான | 2024 ஆண்டின் போது பெல்வத்த அலகில் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், செவனகல அலகிலும் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது என மற்றும் பணிப்பாளர் சபையின் | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பந்தி 51 இற்கு இணங்க நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட் காலம் வருடாந்தம் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பெல்வத்த பிரிவின் ரூபா 1,745,910,345 கிரயத்திற்கான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டு இறுதி அளவிலும், முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, இந்த மதிப்பீட்டு வழு இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இற்கு இணங்க திருத்தப்பட்டு சரியான திறன் மதிப்பு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரத்தை பெற்று கணக்கறிக்கைகளில் சீராக்கல் மேற்கொள்ளப்படும் என. | மீளாய்வு செய்வதற்கும், நியம இலக்கம் 08 இற்கு இணங்க திருத்தப்பட்டு சரியான திறன் மதிப்பு நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு இலக்கம் 02 இன் படி முன்வந்து முன்செல்லல் முறை அல்லது எடையிடப்பட்ட சராசரி முறையில் இருப்புக்கள் வழங்குதல்கள் பெறுமதி கணிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பெல்வத்த பிரிவினால் வழங்கப்பட்ட இருப்புக்கள் இறுதியாக கொள்வனவு செய்த இருப்புக்களின் கொள்வனவு விலையின் அடிப்படையில் பெறுமதி மதிப்பிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது கிரயம் மற்றும் வழங்கலின் விலை இடையே ஏற்பட்டிருந்த ரூபா 25,176,099 இற்கான வித்தியாசம் பெறுமதி மதிப்பீட்டு சீராக்கல் கணக்கொன்றின் மூலம் நிதிக்கூற்றுக்களில் செலவுக்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. கணக்கீட்டு மென்பொருளில் காணப்படும் வழுவொன்று காரணமாக ஏற்பட்டிருந்த இந்த கணக்கு சீராக்கலினால் நிதிக்கூற்றுக்களில் அவ்வவ் செலவு விடயங்களில் சரியான செலவு சித்திரத்துக் காட்டப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு முறைமையின் படி இருப்புக்களை பேணிச் செல்வதற்காக கொள்வனவு செய்யப்படுகின்ற அனைத்து விடயங்களும் இறுதியாக கொள்வனவு செய்யப்பட்ட அலகு விலையில் பெறுமதி மதிப்பீடு செய்யப்படும். இவ்வாறு மாதாந்தம் சேகரமாகும் இருப்புப் பெறுமதியின் வித்தியாசம் கிரய அறிக்கைகளில் சம விகிதத்தில் சீராக்கல் மேற்கொள்ளல் ஆரம்ப காலம் முதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. புதிய கணக்கீட்டு மென்பொருள் நிறுவிய பின்னர் எடையிடப்பட்ட சராசரி முறையில் இருப்புக்களின் விலைகள் கணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இற்க இணங்க இருப்புக்களின் பெறுமதி கணிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் நிர்மாண வேலைகளுக்காக 2014 ஆண்டு முதல் 06 சந்தர்ப்பங்களில் ரூபா 645,635,024 தொகை அரச மானியம் என கிடைத்திருந்ததுடன் இறுதி வரை குறிப்பிட்ட சொத்துக்கள் நிர்மாணித்தல் / கொள்வனவு செய்தல் பூர்த்தி செய்திருக்கவில்லை. எவ்வாறாயினும் இந்த அரச மானியம் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் படி சீராக்கல் மேற்கொண்டிருக்காமையால் அரச மானியம் அந்தப் பெறுமதியினால் மிகையாகவும், தடுத்து வைக்கப்பட்ட உழைப்பு அந்தப் பெறுமதியினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | தொழிற்படு மூலதன தேவைப்பாட்டிற்காக அரசினால் ஈடுபடுத்தப்படும் பணம் அரச மானியம் என இனங்கண்டு உரிமை அதிகரிக்கும் முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதெனவும் மற்றும் 2024 ஆண்டில் சரி செய்யப்படும் எனவும். | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் படி அரச மானியங்கள் சரியாக அறிக்கையிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2012 ஆண்டில் கம்பனியை அரசிற்கு உரித்தாக்கிய சந்தர்ப்பத்தில் உற்பத்தித் திறன் அபிவிருத்தி அமைச்சு, மொனராகல மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகங்களில் இருந்து ரூபா 819,520,305 இற்கான தொழிற்படு மூலதன தேவைப்பாட்டிற்காக அரச மானியம் வழங்கப்பட்டிருந்தது. இந்த அரச மானியம் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் படி கணக்கீடு செய்திருக்காமையால் தடுத்து வைக்கப்பட்ட உழைப்பு அந்தப் பெறுமதியினால் குறைவாகவும், மூலதன மானியம் அந்தப் பெறுமதியினால் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. | தொழிற்படு மூலதன தேவைப்பாட்டிற்காக அரசினால் ஈடுபடுத்தப்படும் பணம் அரச மானியம் என இனங்கண்டு உரிமை அதிகரிக்கும் முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதெனவும் மற்றும் 2024 ஆண்டில் சரி செய்யப்படும் எனவும். | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் படி அரச மானியங்கள் சரியாக அறிக்கையிடப்பட வேண்டும். |
| (எ) | 2022 ஆண்டு ஏப்ரல் மற்றும் ஜூலை மாதங்களில் 05 சந்தர்ப்பங்களில் கம்பனியின் பெல்வத்த அலகிலிருந்து செவனகல அலகிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 7,487,688 தொகை பெறுமதியான 32,136 லீற்றர் எரிபொருள் எண்ணெய் 2022 ஆண்டின் செலவொன்றென கணக்கீடு செய்யாமல் மீளாய்வாண்டில் கம்பனிகளுக்கு இடையான கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ஏனைய பெற வேண்டியவைகள் மற்றும் தடுத்து வைக்கப்பட்ட உழைப்பு ரூபா 7,487,688 தொகை வீதம் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | எரிபொருள் எண்ணெய் இருப்பு செவனகல அலகிற்கு கிடைத்துள்ளது எனவும் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ளதற்கான ஆவணங்கள் காணப்படுகின்றதென. | பயன்படுத்தப்பட்ட எரிபொருள் எண்ணெய் இருப்பு செலவுகள் என இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 760,763,818 தொகை கிரயத்தையுடைய பெல்வத்த பிரிவில் நிறுவப்பட்டிருந்த வடிகட்டல் பகுதியில் நிலையான சொத்துக்களில் ஒவ்வொரு சொத்துப் பிரிவுகளின் கூட்டுத்தொகை மாத்திரம் நிலையான சொத்துப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வுச் செலவு மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கங்களின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | சொத்துக்கள் பெறுமதி மதிப்பீடு செய்யும் போது இந்த சொத்துக்களும் வெவ்வேறான விடயங்களாக பெறுமதி மதிப்பீடு செய்து ஆவணப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது என. | சொத்துக்களை சரியாக இனங்கண்டு அதற்குரிய பெறுமானத் தேய்வுச் செலவு மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பெல்வத்த பிரிவிற்குரிய தொழிற்பாட்டுக் குத்தகை சொத்துக்களுடன் ரூபா 3,507,888,055 தொகைக்கான கள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், நீர்ப்பாசன மற்றும் பல்வேறு | எதிர்காலத்தில் சொத்துக்களின் மீள் மதிப்பீட்டுடன் நிறுவனத்தின் பெறுமானத் தேய்வுக் கொள்கை நாளதுவரை ஆக்குவதற்கு | பெறுமானத் தேய்வு மேற்கொள்ள வேண்டிய சொத்துக்களுக்காக அறுதியான பெறுமானத் தேய்வு விகிதாசாரம் |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் தொழிற்சாலை மின்உற்பத்தி நிலையம் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு விகிதாசாரம் முறையே 15 சதவீதம், 6 சதவீதம் மற்றும் 5 சதவீதம் ஆக காணப்பட்ட போதிலும், அந்த சொத்துக்களுக்குரிய கிரயம் ரூபா 1,682,142,372 தொகைக்கான சொத்துக்களில் 2 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடைப்பட்ட பல்வேறு விகிதாசாரங்களின் கீழ் பெறுமானத் தேய்வு கணிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத் தேய்வுச் செலவு மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கங்களின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஒன்று தீர்மானிக்கப்பட வேண்டியதுடன், பெறுமானத் தேய்வுக் கொள்கைக்கு இணங்க பெறுமானத் தேய்வு கணிக்கப்பட வேண்டும். |
| (இ) | செவனகல மற்றும் பெல்வத்த பிரிவுகளில் 08 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்படுகின்ற முறையே ரூபா 9,475,416 மற்றும் ரூபா 4,904,160 தொகைகளுக்கான வழியில் இருப்பு தொடர்பாக கடந்த ஆண்டுகளில் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், அந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுமார் 10 வருட காலம் கழிந்துள்ள ரூபா 4,904,160 வழியில் இருப்பினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்களை கண்டறிய முடியாமல் உள்ளது எனவும் மற்றும் எதிர் காலத்தில் தகவல்களை கண்டறிந்து சரி செய்யப்படும் எனவும். | இந்த பண்டங்கள் கிடைத்துள்ளனவா என கண்டறிந்து கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பெல்வத்த பிரிவினால் அனுபவிக்கப்பட்டு வருகின்ற 1.212 ஹெக்டயர்கள் அடங்கிய படல்குபுர கரும்பு கொள்வனவு செய்யும் நிலையம் அடங்கிய காணியின் அறுதியான உரிமை சீனிக் கம்பனிக்கு காணப்படாத போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்தியிருக்கவில்லை. | காணியின் உரிமை தொடர்பான ஆவணங்கள் ஏதும் நிறுவனத்திடம் காணப்படாமையால் அறிக்கைகளில் உட்படுத்துவதில் சிக்கல் ஒன்று காணப்படுகின்றதெனவும் மற்றும் கணக்கு அறிக்கைகளில் இந்த காணி உட்படுத்தப்படாமையால் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும். | கம்பனியினால் அனுபவிக்கப்படுகின்ற காணிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செவனகல பிரிவினால் தொழில் முயற்சிகள் வளங்கள் திட்டமிடல் முறைமை (நுசீ ஊலளவநஅ) இற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு ரூபா 30,554,015 தொகை எனினும், அதனை ரூபா 35,650,647 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 5,106,632 இற்கான தொகை தலைமை அலுவலகத்திற்காக செலுத்தப்பட்டிருந்தமையால் கட்டுப்பாட்டுக் கணக்குகளூடாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நுசீ முறைமையின் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் பௌதீக இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் படி செவனகல பிரிவின் களஞ்சியத்தில் ரூபா 6,777,664 தொகை பெறுமதியான 306 இருப்பு விடயங்களின் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன், அரசுக்கு உரித்தாக்கிய சந்தர்ப்பத்தில் இந்த இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் | பௌதீக ரீதியாக சான்றுறுதி செய்யப்பட்ட அனைத்து இருப்பு வகைகளும் நிதிக்கூற்றுக்களில் |

| | | |
|---|---|---|
| பற்றாக்குறையொன்றும் மற்றும் ரூபா 5,192,624 தொகை பெறுமதியான 429 இருப்பு விடயங்களின் மிகையொன்றும் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>பௌதீக ரீதியாக சான்றுறுதி செய்யப்பட்ட பெறுமதியினை கணிக்கப்பட முடியாத 1195 இருப்பு வகைகளும், பயன்படுத்த முடியாத மற்றும் அப்புறப்படுத்தப்பட வேண்டிய ரூபா 4,044,995 தொகை பெறுமதியான 504 இருப்பு விடயங்களும் களஞ்சியத்தில் காணப்பட்டது. இந்த இருப்புக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உட்படுத்தியிருக்கவில்லை எனவும். | உட்படுத்தப்பட வேண்டியதுடன், இருப்பு பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாக முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பௌதீக இருப்புக் கணிப்பீட்டு அறிக்கையின் படி செவனகல பிரிவின் இருப்பு மீதி ரூபா 2,764,156,341 தொகை எனினும், நிதிக்கூற்றுக்களின் படி அந்தப் பெறுமதி ரூபா 3,675,660,095 தொகையாக காணப்பட்டமையால் இறுதி இருப்பு ரூபா 911,503,754 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2011 ஆண்டில் கம்பனியை அரச மயமாக்கிய சட்டத்தின் படி அசையாத சொத்துக்கள் மாத்திரம் உரித்தாக்கப்பட்டதுடன், அசையும் சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை என மற்றும் இதன் காரணமாக இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் படி மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதி இடையே வித்தியாசம் காணப்படுகின்றதென. | இறுதியிருப்பு மீதி சரியாக நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெல்வத்த பிரிவில் காணப்பட்ட ரூபா 2,463,859,790 இற்கான சீனி இருப்பு பௌதீக ரீதியாக சான்றுறுதி செய்திருக்காமையால் அந்த மீதியின் உண்மைத் தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | களஞ்சியப்படுத்தும் போது மற்றும் வினியோகிக்கும் போது ஏற்படுகின்ற அழுத்தம் காரணமாக கணிப்பதற்காக சீனிப் பொதிகள் தெரிவாக தென்படாமை மற்றும் அந்த நிலைமையை சரி செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என. | அனைத்து இருப்புக்களும் பௌதீக ரீதியாக சான்றுறுதி செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெல்வத்த சீனித் தொழிற்சாலையை அரசுக்கு உரித்தாக்கும் போது அதிலிருந்து அகன்று வேறு நிறுவனம் ஒன்றாக பால் சார்ந்த உற்பத்திகள் மேற்கொள்ளும் நிறுவனம் ஒன்றிற்கு சொந்தமான 20 டிரக்டர் வண்டிகளை 2011 ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 திகதி வரை பயன்படுத்துவதற்காக அந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 65,386,355 இற்கான தேறிய தொகை மற்றும் அந்த நிறுவனத்தினால் கம்பனிக்கு சொந்தமான உத்தியோகபூர்வ வீடுகளை பயன்படுத்துவதற்காக பெற வேண்டிய ரூபா 19,601,068 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக குத்தகை உடன்படிக்கை அல்லது மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட நிறுவனத்துடன் காணப்பட்ட வீடுகள் தொடர்பான உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு குறிப்பிட்ட வீடுகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என, மேலும் 04 வீடுகள் விடுக்கப்பட வேண்டிக் காணப்பட்டது என, 20 டிரக்டர்களை மீண்டும் வழங்குதற்கு கலந்துரையாடப்படுகின்றது எனவும், அந்த நிறுவனத்துடன் காணப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதெனவும் மற்றும் எதிர் காலத்தில் காசு அடிப்படையில் மாத்திரம் உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தொடர்புடைய அரச மற்றும் தனியார் கம்பனிகளில் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனிக் கம்பனியின் ஒவ்வொரு பிரிவுகளிடையே மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் விரிவாக வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன், அவற்றை உறுதிப்படுத்துவதற்காக எழுத்துமூல சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | பெல்வத்த அலகிலிருந்து 2022 ஜுலை மாதத்தில் 02 சந்தர்ப்பங்களில் செவனகல பிரிவிற்கு எடுத்துச் செல்லப்பட்ட ரூபா 5,359,848 தொகை பெறுமதியான 12792 லீற்றர் எரிபொருள் எண்ணெய் செலனகல அலகிற்கு கிடைத்தற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். எரிபொருள் எண்ணெய் செவனகல அலகிற்கு கிடைக்கப் பெற்று பயன்படுத்தப்பட்டதற்கான ஆவணங்கள் காணப்படுகின்றன என. | கணக்காய்விற்கு தேவையான அனைத்து எழுத்துமூல சான்றுகள் கணக்காய்வுச் சந்தர்ப்பத்திலேயே வழங்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23(அ) இனால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க | கம்பனி சீனி உற்பத்தி அல்லது சீனி சுத்திகரிப்பு தொடர்பாக வருடாந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | வருடாந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான சட்டத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சுற்றாடல் பாதுகாப்பு செய்முறை ஒன்று நிறுவப்பட்டு சட்டத்திற்கு இணங்க சுற்றாடல் அனுமதிப்பத்திரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சரினால் 2008 ஜனவரி 25 திகதிய 1533/16 இலக்கம் கொண்ட விஷேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட கட்டணங்களாக பிரிவு 1 இன் கட்டளை 30 | | | பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | | | |
| | i. அத்தியாயம் XIX பந்தி 5.1 | பெல்வத்த பிரிவின் உத்தியோகத்தர்களின் வீடுகளுக்காக வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்காததுடன், அந்த வீடுகளின் திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு செலவுகள் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த வீடுகளுக்காக வாடகைத் தொகையொன்று தீர்மானிப்பதற்கும் குறிப்பிட்ட காலம் வரை பராமரிப்புச் செலவினை குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் சாட்டுவதற்கும் குறிப்பிட்ட அறிக்கையொன்று தயாரிக்கும் படி குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது என. | வீடுகளுக்காக உத்தியோகத்தரிடம் வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| | ii. அத்தியாயம் XIX பந்தி 5.2 | மாதாந்த வீட்டு வாடகை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், கம்பனியின் செவனகல பிரிவினால் அதன்படி, செயற்படாமல் மாதாந்தம் ரூபா 100 இற்கும் 850 இற்கும் இடைப்பட்ட பல்வேறு கட்டண அளவுகள் பெயரளவு வாடகை என அறவிடப்பட்டிருந்தது. | மாதாந்த வீட்டு வாடகையை திருத்தத்திற்காக வீடுகளின் பொருளாதாரப் பெறுமதியை கணிப்பதற்கான பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென. | தற்போதைய சந்தை நிலைமைக்கு பொருத்தமானவாறு வீட்டு வாடகை திருத்தப்பட வேண்டும். |
| | iii. அத்தியாயம் XIX பந்தி 5.8 | நீர் பில்பத்திரங்கள் மற்றும் மின்சார பில் பத்திரங்கள் உத்தியோகத்தரினால் செலுத்தப்பட்ட வேண்டியிருந்த போதிலும், செவனகல பிரிவின் நீர் நுகர்வு 60 அலகுகளுக்கு மிகையாக பயன்படுத்திய சந்தர்ப்பத்தில் மாத்திரம் உத்தியோகத்தர்களிடம் கட்டணம் அறவீடு செய்வதற்கும், மின்சாரம் நுகர்வுக்காக ரூபா 250 சலுகை வழங்கப்பட்ட பின்னர் மின்சார பில்பத்திரம் சம்பளத்திலிருந்து அறவீடு செய்யும் காரணத்தினால் மீளாய்வாண்டின் போது கம்பனி | செவனகல அலகில் ஆரம்பம் முதல் ஊழியர்களுக்காக இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது எனவும், அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது எனவும். | மின்சாரம் மற்றும் நீருக்கான கட்டணங்கள் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டும். கம்பனியினால் செலுத்தப்பட்டுள்ள கட்டணம் திருப்பி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 11,394,170 இற்கான தனிப்பட்ட பில்பத்திரங்களை தீர்ப்பதற்கு கம்பனியின் நிதியம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371(02) மற்றும் 2021 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை | பதவியணி நிலைமை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 உச்ச மட்டத் தொகையொன்று வரை கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் மீது நிமித்தத் துணைக் கட்டுநிதி வழங்கப்பட முடியும் எனினும், அதற்கு இணங்காமல் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் மீது நிர்மாண வேலை அலுவல் ஒன்றிற்காக சிவில் பராமரிப்பு முகாமையாளருக்கு ரூபா 5,310,000 தொகை முற்பணத் தொகை வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியளவில் குறிப்பிட்ட வேலை முடிவடைந்து 05 மாதம் கடந்திருந்த போதிலும், அந்த முற்பணத் தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.<br>இதற்காக நிர்மாண வேலைப் பண்டங்கள் கொள்வனவின் போது பெறுகை நடைமுறை கடைபிடிக்கப்படாமல்<br>கம்பனியின் சிவில் பராமரிப்பு முகாமையாளரின் தற்றுணிவின் படி ரூபா 5,130,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, கம்பனிக்கு உரிமையொன்று காணப்படாத கட்டிடமொன்றினை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 5,310,000 இற்கான அரச பணம் செலவிடப்பட்டிருந்ததுடன்,<br>கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் மீது இந்த அலுவல்கள்<br>மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | முறையான விசாரணை ஒன்று நடாத்தி கம்பனிக்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தால் அதனை அறவீடு செய்ய வேண்டியதுடன், பொறுப்பான தரப்பனருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 11 திகதிய PED04/2023 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் | | | |
| | i. பந்தி 1.1 | குறிப்பிட்ட பந்திக்கு இணங்க செவனகல பிரிவின் மற்றும் | நிறுவனத்தினால் கணிக்கப்பட்ட சமம்பாடு | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தலைமை அலுவலக உத்தியோகத்தருக்காக மீளாய்வாண்டு தொடர்பாக செலுத்த வேண்டிய மிகை ஊதியக் கொடுப்பனவு ரூபா 27,225,000 தொகை எனினும், மிகை ஊதியம் மற்றும் ஊக்குவிப்பு என ரூபா 133,572,776 தொகை செலுத்தியிருந்தமையால் மேற்கூறிய ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 106,347,776 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒன்றின் படி ஊக்குவிப்பு கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது என. | முரணாக செலுத்தப்பட்டிருந்த தொகையினை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், கொடுப்பனவு மேற்கொள்வனவு தொடர்பாக பொறுப்பான தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | ii. பந்தி 1.2 | குறிப்பிட்ட பந்தியின் படி பெல்வத்த பிரிவிற்காக மீளாய்வாண்டு தொடர்பாக செலுத்தப்படக்கூடிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா 80,600,000 தொகை எனினும், ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா 319,653,062 தொகை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி, மேற்கூறிய ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 239,053,062 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தினால் கணிக்கப்பட்ட சமம்பாடு ஒன்றின் படி ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்த தொகையினை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், கொடுப்பனவு மேற்கொள்வனவு தொடர்பாக பொறுப்பான தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2023 மே 16 திகதிய 01/2021(i) அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட 2021 நவம்பர் 11 திகதிய அரச தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 6.9 | அரச தொழில் முயற்சி ஒன்றினால் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனியொன்றுக்கு பெற வேண்டிய தொகையினை பதிவளிக்கும் போது பணிப்பாளர் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், கம்பனி அந்த ஏற்பாடுகளின் படி செயற்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 473,274,504 இற்கான பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2015 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த விவசாயக் கடன் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளை கடைபிடிக்காமல் விவசாயக் கடன் பதிவழித்தல் தொடர்பாக பொறுப்பான தரப்பினர் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2022 ஜனவரி 14 திகதிய 01/2015 இலக்கம் கொண்ட அரச தொழில் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமல் பெல்வத்த மற்றும் செவனகல பிரிவுகளில் 22 உத்தியோகத்தர்களுக்கு 34,777 | கம்பனியின் முகாமைத்துவத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்த |

| | | | |
|---|---|---|---|
| முயற்சிகள் சுற்றறிக்கை | லீற்றர் எரிபொருள் மிகையாக வழங்கப்பட்டு அதற்காக ரூபா 11,782,196 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஒன்றின் படி கொடுப்பனவு செய்யப்பட்டது என. | தொகையினை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், கொடுப்பனவு மேற்கொள்வனவு தொடர்பாக பொறுப்பான தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 2,835,118,969 இற்கான இலாபம் ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 6,045,575,871 தொகையாக காணப்பட்டது. அதன்படி, முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி விளைவுகளில் ரூபா 3,210,456,902 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக கம்பனியின் மொத்தச் செலவு ரூபா 159,659,807 தொகையினால் அதிகரித்தலும் மொத்த வருமானம் ரூபா 3,050,797,095 தொகையினால் குறைவடைதலும் இந்த பின்னடைதலுக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செவனகல தொழிற்சாலையின் கொள்திறனை விரிவாக்கும் செயற்திட்டம் 2023 ஏப்ரல் 23 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த செயற்திட்டம் 2024 ஆகஸ்ட் 07 திகதி அளவிலும் செயற்படு நிலைமைக்கு ஆக்கப்பட்டிருக்காததுடன், அதற்காக இறக்குமதி செய்யப்பட்டிருந்த ரூபா 201,782,433 இற்கான இயந்திரங்களின் உத்தரவாத காலம் முடிவடைந்திருந்தது. இயந்திரம் இறக்குமதி செய்யும் செய்முறையின் பலவீனம் காரணமாக ரூபா 3,622,005 இற்கான தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. பெறுகை நடைமுறையினை கடைபிடிக்காமல் ரூபா 7,723,058 இற்கான இயந்திரம் ஒன்று இறக்குமதி செய்ப்பட்டிருந்ததுடன், இயந்திரத்தை பொறுத்துவதற்காக இந்தியாவில் இருந்து வந்திருந்த வழங்குனரின் ஊழியர்களுக்கு உணவு பானங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகளுக்காக ரூபா 2,824,704 தொகை செலவிடப்பட்டிருந்தது. | இது தொடர்பாக விசாரணை ஒன்று நடாத்தப்பட்டு வருவதுடன் அதன் அறிக்கை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்து பயன்படுத்த வேண்டும். மேலும், முறையான விசாரணை மேற்கொண்டு செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது கம்பனிக்கு ஏற்படுத்தியிருந்த நட்டங்கள் காணப்படின் அதனை அறவீடு செய்யப்பட வேண்டியதுடன், பொறுப்பான தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பனியின் பெல்வத்த மற்றும் செவனகல அலகுகளில் கொதிகலனுக்கு எரிபொருள் எண்ணெய் கொள்வனவு செய்யும் போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து கொள்வனவு செய்யாமல், பெறுகை நடைமுறை கடைபிடிக்கப்படாமல் தனிநபர் ஒருவருக்கு எரிபொருள் எண்ணெய் கொள்வனவு செய்வதற்கான டென்டர் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, குறிப்பிட்ட வழங்குனரினால் சுத்தீகரிக்கப்பட்ட எரிபொருள் எண்ணெய்க்குப் பதிலாக கப்பல்கள் மற்றும் இயந்திரங்களிலிருந்து அகற்றப்படுகின்ற சுத்தீகரிக்கப்படாத கறுப்பு எண்ணெய் வழங்கப்பட்டிருந்ததுடன், கம்பனி அதற்காக ரூபா 341,687,582 தொகை செலுத்தியிருந்தது. அந்தக் கறுப்பு எண்ணெய்யை பயன்படுத்திய காலப் பகுதியில் கொதிகலன் அடிக்கடி செயற்படாமல் இருந்தமையால் அவ்வாறு செயற்படாதிருந்த 46 நாட்கள் காலப் பகுதியில் ரூபா 300 மில்லியன் தொகை பெறுமதியான 6,000 லீற்றர் எதனோல் உற்பத்தியொன்றின் கம்பனிக்கு இழக்க நேரிட்டிருந்தது. | இது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற இலஞ்ச அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அந்த ஆவணங்களை பெற்றுக்கொண்டு பதிலளிக்கப்படும் என. | ஆணைக்குழுவினால் முறைப் பிரகாரம் குறிப்பிட்ட ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து கம்பனிக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை மீண்டும் அறவீடு செய்வதற்கும் பொறுப்பான தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |
| (இ) | 2011 ஆண்டில் மற்றும் அதன் பின்னைய ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 11 பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முழுமையாக கைவிடப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட 11 செயற்திட்டங்களுக்காக 2022 மார்ச் மாதம் அளவில் ரூபா 176,665,880 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதேபோல், குறிப்பிட்ட செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 9 வருடங்களுக்கும் 13 இற்கும் இடைப்பட்ட கூடிய காலம் கடந்திருந்த போதிலும் அந்த செயற்திட்டங்களை பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. அதன்படி, செலவிடப்பட்டிருந்த ரூபா 176 மில்லியன் தொகை விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்ததுடன், கம்பனி எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் இருந்தது. | 02 செயற்திட்டங்கள் தனியார் உரிமையின் கீழ் காணப்பட்ட காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது எனவும், 09 செயற்திட்டங்கள் அரசுக்கு உரித்தாக்கியதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டவை எனவும், இது தொடர்பாக மேலும் விசாரணைகள் மேற்கொண்டு நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்குள்ள இயலுமையை தீர்மானிக்கப்படும் என. | கம்பனி அரசிற்கு உரித்தாக்கிய பின்னர் முறையான ஆய்வொன்று இன்றி செயற்படுத்தப்பட்டு தற்போது கைவிடப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்காக கம்பனியின் பணத்தை செலவிட்டிருந்த தரப்பினர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2011 ஆண்டின் போது வ/ப லங்கா சீனிக் கம்பனியின் பெல்வத்த அலகு அரசிற்கு உரித்தாக்கிய பின்னர் கம்பனியின் அந்த அலகிற்கான | அரசுக்கு உரித்தாக்கிய சந்தர்ப்பத்தில் பதவியணி மதிப்பாய்வு இனங்கண்டு அங்கீகரித்திருக்கவில்லை | பொருத்தமான பதவியணித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | பதவியணித் தேவைப்பாட்டை (ஊயனசந) இனங்கண்டு திறைசேரியின் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து பதவியணியினை அங்கீகரிப்பதற்கு மற்றும் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறிருக்கும் போது 2021/2022 ஆண்டுகளின் போது முறைசாரா விதமாக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது மாத்திரம் 159 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அதேபோல், 510 ஊழியர்களுக்கு தகைமை மற்றும் அனுபவம் முறையான நடைமுறை ஒன்றினை கடைபிடித்து பரிசோதனை மேற்கொள்ளாமல் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தது. | எனவும், தேவைப்பாட்டின் படி அடிக்கடி முகாமைத்துவத்தினால் ஊழியர்கள் சேர்க்கப்பட்டனர் எனவும், ஆளணித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறுவதற்காக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் நீண்ட காலமாக ஒரே தரத்தில் சேவையாற்றுதல் ஊழியர்களின் திருப்தியற்ற நிலைமையை தவிர்ப்பதற்காக பதவியுயர்வுகள் வழங்கப்பட்டன. | வேண்டும். மேலும் முறைசாரா விதமான வழங்கப்பட்டுள்ள நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் தொடர்பாக மீண்டும் பரிசோதனை மேற்கொண்டு அந்த ஊழியர்கள் முறைப் பிரகாரம் கம்பனியின் பதவியணியில் உட்படுத்துவதற்கான இயலுமை மீது கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (உ) | கம்பனியின் செவனகல பிரிவின் வடிசாலைக்கு தேவையான ஸ்டீம் (Steam) பெற்றுக்கொள்வதற்காக வெளி நபர் ஒருவருக்கு சொந்தமான பயோமாஸ் கொதிகலன் ஒன்று நிறுவனத்தில் நிறுவப்பட்டு வருடாந்த தேவைப்பாடான 32,400 மெட்ரிக் தொன் ஸ்டீம் ரூபா 317,520,000 தொகைக்கு பெற்றுக்கொள்வதற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட வழங்குனரை தெரிவு செய்யும் போது முறையான பெறுகை நடைமுறை கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த செயற்திட்டத்திற்காக தொழிற்சாலை அறிவுரையாளரினால் போலியான முறையில் தயாரிக்கப்பட்டிருந்த தரவுகளை உட்படுத்தப்பட்டு கிரய நலன் பகுப்பாய்வொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. மேலும், 2024 ஆகஸ்ட் 07 திகதி அளவில் குறிப்பிட்ட செயற்திட்டம் செயற்படு நிலைமையில் காணப்படாதிருந்த போதிலும், வழங்குனருக்கு ரூபா 48,600,000 இற்கான முற்பணத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. கிரய நலன்கள் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது எனவும், குறிப்பிட்ட காலப் பகுதியில் வெளிநாட்டு ஒதுக்க பற்றாக்குறை காரணமாக இயந்திரத்தை இறக்குமதி செய்தல் தாமதம் அடைந்ததெனவும், மூலப்பொருட்களின் தட்டுப்பாடுகள் காரணமாக சிவில் வேலைகளை பூர்த்தி செய்தல் தாமதம் அடைந்ததெனவும் மற்றும் டீழுழு முறையின் கீழ் செயற்திட்டம் செயற்படுவதனால் செயலாற்றுகை பிணைமுறியொன்று தேவைப்படாது என. | முறையான பெறுகை நடைமுறை ஒன்றினை கடைபிடிக்கப்படாமை தொடர்பாக முறைசாரா கிரய நலன் அறிக்கை தயாரித்தல் தொடர்பான மற்றும் முறையான அங்கீகாரம் இன்றி மற்றும் செயலாற்றுகை பிணைமுறி பெற்றுக்கொள்ளாமல் வழங்குனருக்கு முற்பணம் செலுத்தப்படல் தொடர்பாக பொறுப்பான தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கம்பனியின் அலுவல்களுடன் தொடர்பு ஏதும் இன்றிய வெளி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு கம்பனியின் விருந்தினர் இல்லங்களில் தங்குவதற்கு | கம்பனியின் விருந்தினர் இல்லத்தில் தங்குவதற்கு மற்றும் உணவு பானங்கள் வழங்குவதற்காக | கம்பனிக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை விரைவாக அறவிடப்பட வேண்டியதுடன், |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் உணவு பானங்கள் வழங்குவதற்காக 2020 ஜனவரி முதல் 2022 ஏப்ரல் மாதம் வரை ரூபா 10,260,433 தொகை செலவிடப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டிருந்த தொகை தொடர்பாக விரிவான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதனை விரைவாக சமர்ப்பிக்கப்படும் என. | பொறுப்பான தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | கரும்புப் பயிர்ச் செய்கைக்காக கம்பனியில் இருந்து ரூபா 1,262,363,910 இற்கான கடனை பெற்றிருந்த விவசாயிகளிடம் கரும்புப் பயிர்ச் செய்கைக்கு புறம்பாக ஏனைய பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டிருந்த 159 விவசாயிகளை மீண்டும் கரும்புப் பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுத்தல் மற்றும் அந்தக் கடனை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், அந்தப் பெற வேண்டிய விவசாயக் கடனில் ரூபா 61,527,826 தொகை 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படும் பழைய கடனாக காணப்படுவதுடன், ரூபா 77,719,383 தொகை 03 வருடங்களுக்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய கடன் மீதிகளாகும். | அங்கீகாரமற்ற பயிர் செய்கையாளர்களை கரும்புப் பயிர்ச் செய்கைக்கு வலைத்துக் கொள்வதுடன் இந்தக் கடன் மீதி குறைவடையும் எனவும், வருடாந்தம் அங்கீகாரம் இன்றி பயிர்ச் செய்கையில் ஈடுபடும் ஆட்கள் காணப்படுவதனால் இந்தக் கடன் மீதியை சூனியமாக்க முடியாது எனவும் மற்றும் அங்கீகாரமற்ற பயிர்ச் செய்கையாளர்களை கரும்புப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்துவதற்காக குறைந்தளவு இரண்டு வருட காலம் செலவிடப்படுகின்றது எனவும், கடனை அறவீடு செய்வதற்காகவும் கனிசமான காலமொன்று செலவிட நேரிடுகின்றது எனவும். | விவசாயக் கடன் முகாமைத்துவம் தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டியதுடன், முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பழைய கடன் மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஏ) | செவனகல பிரிவில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த 18 வாகனங்களுக்கு உரிய ரூபா 13,041,107 தொகைக்கான 2284 அலகுகள் பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் களஞ்சியத்தில் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பயன்படுத்தப்படாத ரூபா 85,305,687 தொகை பெறுமதியான 6269 அலகு பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் பொருத்தமான விதத்தில் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | இந்த உதிரிப் பாகங்கள் தெடர்பாக வழக்கு ஒன்று காணப்படுவதனால் அகற்றுவது தொடர்பான தீர்மானம் ஒன்றை அணுகுவதற்கு சட்டரீதியான தடைகள் காணப்படுகின்றதென. | நீதிமன்றக் கட்டளை கிடைத்த பின்னர் அதன்படி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | செவனகல பிரிவின் பிரதான களஞ்சியத்தில் காணப்பட்ட திறந்த சந்தையில் ரூபா 560,700 தொகை பெறுமதியான 1486 கிலோகிராம் பித்தளை மற்றும் செப்பு பற்றாக்குறையொன்று காணப்பட்டது. | இது தொடர்பாக விசாரணையொன்று நடைபெறுகின்றதுடன், அந்த அறிக்கை எதிர் காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கம்பனிக்கு ஏற்படுத்தியிருந்த நட்டத்தை விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டியதுடன், பொறுப்பான தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | பெல்வத்த பிரிவினால் மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்டிருந்த ஆனால் இருப்பு கணிப்பீட்டுச் சந்தர்ப்பத்திலும் கொள்வனவாளர்களினால் அகற்றியிருக்காத 2626 மெட்ரிக் தொன் சீனி களஞ்சியத்தில் காணப்பட்டதுடன், மூன்றாம் தரப்பினருக்கு உரிய இந்த இருப்புக்காக 04 நாட்கள் முதல் 48 நாட்கள் வரையான காலம் களஞ்சிய வசதிகள் வழங்கியிருந்தது. மேலும், ரூபா 885,962,222 தொகை விற்பனவுப் பெறுமதியை உடைய மூன்றாம் தரப்பினருக்கு சொந்தமான இருப்பினை களஞ்சியத்தில் தடுத்து வைப்பதன் மூலம் கம்பனி களஞ்சியக் கிரயமொன்று மேற்கொண்டிருத்தல், ஆபத்தொன்றினை மேற்கொண்டிருத்தல் மற்றும் ரூபா 7,589,750 தொகை தாமதக் கட்டணமும் அறவீடு செய்திருக்கவில்லை. | சிவப்புச் சீனிக்கு சந்தையில் காணப்படும் நெருக்கடி நிலைமை காரணமாக சீனி இருப்பினை கொள்வனவாளர்கள் நீண்ட காலம் எடுக்கின்றனர் எனவும், தாமதக் கட்டணம் அறவீடு செய்தால் கொள்வனவாளர் அடுத்த டெண்டர்களுக்காக முன்வருதல் வரையறையாகும் என. | அறவிடப்படாத தாமதக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கும் இந்த நிலைமையில் கம்பனிக்கு ஏற்படுகின்ற ஆபத்து நிலைமை, மேற்கொள்ள வேண்டிய மேலதிக கிரயம் மற்றும் தாமதக் கட்டணத்தை அறவீடு செய்தல் தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்துதலும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஓ) | கம்பனியின் பெல்வத்த பிரிவின் 4607 ஹெக்டயருக்கான 04 காணிகளின் கிரயமாகிய ரூபா 44,149,728 தொகை கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 28,050,728 இற்கான கிரயம் பெல்வத்த மற்றும் தலைமை அலுவலகம் அமைந்துள்ள 1.686 ஹெக்டயர் காணி உரிமை கம்பனியிடம் காணப்படவில்லை. | பெல்வத்த மற்றும் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணிகள் தொடர்பாக சிக்கல்கள் இதுவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை எனவும், தலைமை அலுவலகம் தொடர்பாக வழக்கொன்று நடைபெற்று வருகின்றதெனவும். | கம்பனியினால் அனுபவிக்கப்படுகின்ற காணிகளின் உரிமையை உரித்தாக்குவதற்கு மற்றும் கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | 2018 ஆண்டின் போது செவனகல பிரிவினால் ரூபா 9,564,866 தொகை பெறுமதியான ஆவியாக்கல் இயந்திரம் ஒன்று (Evaporator) இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு ரூபா 3,924,394 இற்கான சுங்கவரி செலுத்தப்பட்டிருந்தது. அதற்குரிய துணைக் கருவிகள் (SS Tube) விவரக் குறிப்புகளுடன் இணங்காமையால் திருப்பி அனுப்பப்பட்டு 2019 ஆண்டில் மீண்டும் இறக்குமதி செய்யும் போது செலுத்தியிருந்த ரூபா 4,830,446 இற்கான சுங்கக் கட்டணம் வழங்குனரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் அந்த பெறுமதி கம்பனிக்கு நட்டமொன்றாக ஆகியிருந்தது. | பணிப்பாளர் சபைக்கு அறிவிப்பதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக 2024 இரண்டாவது காலாண்டு கணக்காய்வுக் குழுவில் அறிவுரை வழங்கப்பட்டது என. | கணக்காய்வுக் குழுவின் அறிவுரையின் படி நடவடிக்கை எடுத்து கம்பனிக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை மீண்டும் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (க) | செவனகல அலகிற்கு சொந்தமான வலைய இலக்கம் 04 (கொவுல்ஆர) மற்றும் வலைய இலக்கம் 05 (கினிகல்பெலெஸ்ஸ) உரிமையான | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என மற்றும் அங்கீகாரம் இன்றிய | இந்த அங்கீகாரமற்ற செயற்பாடுகள் தொடர்பாக கணிசமான காலம் கடந்திருப்பதனால் உரிய |

| | | | |
|---|---|---|---|
| | 1072.89 ஹெக்டயர் அளவான காணியின் 74.21 ஹெக்டயர் காணி அங்கீகாரமற்ற பயிர்கள் பயிர் செய்வதற்காகவும் மற்றும் 8.32 ஹெக்டயர் அளவான காணி அங்கீகாரம் இன்றிய நிர்மாண வேலைகள் (வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள்) மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செயற்பாடுகளுக்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | நடவடிக்கை எடுத்தலை தீவிரப்படுத்த வேண்டும். |
| (ங) | செவனகல அலகில் 2023 ஆண்டில் உத்தியோகத்தர் மற்றும் விவசாயிகளுக்கு 276015 கிலோகிராம் சீனி ரூபா 65 விலைக்காக மற்றும் 208195 கிலோகிராம் ரூபா 170 விலைக்கும் வழங்கப்பட்டிருந்தது. 2023 ஆண்டில் சீனி கிலோகிராம் ஒன்றின் உற்பத்திக் கிரயம் ரூபா 262.69 தொகையாக காணப்பட்டதுடன், உற்பத்திக் கிரயத்தை அணவல் செய்யாத விலையொன்றுக்கு சீனி இருப்பினை வழங்கியிருத்தல் கம்பனிக்கு ரூபா 73,863,484 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் என. அரசிற்கு உரித்தாக்குவதற்கு முன்னர் இருந்து இந்தச் சலுகை செயற்பட்டிருந்ததெனவும், தீர்மானம் ஒன்று எடுப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் எனவும். | உற்பத்திக் கிரயத்தை விட குறைவான விலைக்கு இருப்பினை வழங்குதல் மூலம் ஏற்படுகின்ற நட்டத்தை தவிர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ச) | தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங் காணாமல் களஞ்சிய விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 133,653,982 தொகை பெறுமதியான 7,931 இருப்பு விடயங்கள் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் விளைவற்று களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. | பெல்வத்த அலகில் காணப்படுகின்ற 05 வருடங்களுக்கு மிகையான 1662 பழைய இருப்பு விடயங்கள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. | பயன்படுத்த முடியாத பழைய இருப்பு விடயங்களை முறைப் பிரகாரம அப்புறப்படுத்த வேண்டும். |
| (ஞ) | பெல்வத்த பிரிவினால் 2013 ஆண்டின் போது தொழிற்பாட்டுக் குத்தகை வசதிகளின் கீழ் ரூபா 128,910,000 இற்கான கிரேன் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்தவதற்காக ரூபா 120,750,000 தொகையொன்று மற்றும் அதற்குத் தேவையான மின்சாரம் வழங்குவதற்காக ரூபா 2,254,850 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், வழங்குனரினால் இணங்கியவாறு அந்த இயந்திரத்தை தொழிற்சாலையில் நிறுவப்படாமையால் ரூபா 123,004,850 கிரயம் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த இயந்திரம் கொள்வனவு செய்திருந்த நாள் முதல் பயன்படுத்த முடியாமல் விளைவற்று காணப்பட்டது. | குறிப்பிட்ட வழங்குனருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | இந்த சிக்கனமற்ற செலவுகள் தொடர்பாக பொறுப்பான தரப்பினருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ட) | இலங்கை சீனிக் கம்பனியின் தலைமை அலுவலகத்தினால் 5000 மெட்ரிக் | இதற்காக நாணயப் பத்திரம் திறப்பதற்கு நடவடிக்கை | பொருளாதாரத்தில் காணப்பட்ட சிக்கல் |

தொன் மொலேஸஸ் இறக்குமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரக் கட்டணமாக இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு ரூபா 4,445,682 தொகை 2022 ஆம் ஆண்டில் செலுத்தியிருந்த போதிலும், கம்பனியின் மொலேஸஸ் இறக்குமதி செய்திருக்காமையால் அதற்காக செலவிடப்பட்டிருந்த செலவு விளைவற்றதொன்றாக மாறியிருந்தது.

எடுக்கப்பட்ட போதிலும், வெளிநாட்டு ஒதுக்கக் கட்டுப்பாடு காரணமாக 2023 ஆண்டு வரை தாமதமடைய நேரிட்டது. இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் செலுத்தப்பட்ட தொகையினை திருப்பிச் செலுத்துவதற்கு மறுத்துள்ளது.

நிலைமை தொடர்பாக முறையான கவனத்துடன் மற்றும் அவதானம் செலுத்தாமல் கம்பனியின் நிதியம் செலவிடப்பட்டமை தொடர்பாக பொறுப்பான தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.